**வாக்குமூலம்–வழக்கு சாட்சி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 3, திருப்பத்தூர்**
**வழக்கு எண் C.C. No. 70/2021**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01 ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. **4** வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சிவக்குமார் | தொழில் | : | தலைமை காவலர் |
| தந்தை/கணவர் பெயர் | : | திரு. கணேசன் | ஜாதி | : | |
| ஊர் | : | ஜோலார்பேட்டை | சமயம் | : | |
| மாவட்டம் | : | திருப்பத்தூர் | வயது | : | 39 |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

**தேதி:** 01.08.2025

**அ.சா. 4 : முதல் விசாரணை**

நான் தற்போது காட்பாடி இரயில்வே காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜோலார்பேட்டை இருப்பு பாதை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த சமயம் 13.11.2019 அன்று நான் குற்ற தடுப்பு பணியில் இருந்த சமயம் நிலைய குற்ற எண். 172/2019 இதச பிரிவு 392 வழக்கில் காவல் ஆய்வாளர் எதிரி வெற்றி வேல் என்பவரை கைது செய்து விசாரித்த சமயம் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு சொத்தை கைப்பற்றியபோது நான் காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்து பணி செய்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அன்றை தினம் நானும், காவலர் நரேந்திர குமார் மற்றும் காவல் ஆய்வாளர் குற்ற தடுப்பு பணியில் ஈடுபட்டிருந்தோம். நாங்கள் ஜோலார்பேட்டையில் இருந்து காலை 09.00

மணிக்கு ஜீப்பில் கிளம்பினோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் யார் சாட்சியாக இருந்தார் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. எதிரியிடமிருந்து என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்ட விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.